**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 407/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 10.01.2025.**

| | |
|---|---|
| **Name : ராசாத்தி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தோரமங்கலத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். எனது கணவர் பெயர் பழனிசாமி ஆகும். எனது கணவர் உடல்நிலை சரியில்லாமல் கடந்த 21.09.2024 ம் தேதியன்று இறந்துபோய் விட்டார். என் வீட்டிற்கு அருகில் உள்ள தண்ணீர் தொட்டியை எதிரி ரஞ்சிதா டிராக்டர் விட்டை உடைத்து விட்டார். கடந்த 04.01.2024 ம் தேதி காலை 7 மணி அளவில் எங்கள் வீட்டிற்கு முன்பாக தண்ணீர் பிடிக்க சென்றேன்.

2.அப்போது தொட்டி இடிந்த நிலையில் இருந்தது. அங்கு நின்று நான் தண்ணீர் தொட்டியை யார் உடைத்தார்கள் என்று பேசிக்கொண்டிருந்தேன். தொட்டியை ரோட்டில் கட்டி வைத்துள்ளாய் நான் அப்படி தான் இடிப்போன் உன்னால் என்ன முடியுமோ பார்த்துக்கொள் என்று தேவடியா, கண்டாரஓலி என்று கெட்ட வார்த்தையால் ரஞ்சிதா என்னை திட்டினார்.

3. அதன் பிறகு ரஞ்சிதா, .உருட்டு கட்டையை மறைத்து கொண்டு வந்து என்னுடைய தலையில் ஓங்கி அடிக்கவந்தார். அதனை இடது கையால் தடுத்தேன். பெருவிரலில் பலத்த அடிப்பட்டு எலும்பு எல்லாம் உடைந்து விட்டது. முதுகில், கால், நெஞ்சில் ஆகிய இடங்களில் வீக்க காயம் ஏற்பட்டது.

அங்கிருந்துபோகும்போது கட்டையை கீழே போட்டுவிட்டு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றார். கௌசல்யா என்னுடைய புடவை, ஜாக்கிட்டை பிடித்து கிழித்து விட்டார்.

4. அருகில் இருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டனார். எனக்கு அவமானமாகிவிட்டது. பிறகு வீட்டிற்கு சென்று புடவை, சீலையை மாற்றிவிட்டு, என்னுடைய கணவருடன் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் சென்றோம். இந்த தகவலை மருமகள் தேவகி அவர்களிடம் அப்போது சொல்லிவிட்டேன். அவர் சென்னிமலையில் இருந்து நேரடியாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார்.

5. அடுத்தநாள் மருத்துவமனை வந்த போலீசார் என்னை விசாரித்தனர். நான் நடந்ததை சொன்னேன். எழுதி கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். புகார் **அ.சா.ஆ 1** ஆகும். என்னை அடித்த உருட்டு கட்டையை பார்த்தால் அடையாளம் கூறமுடியும். நீதிமன்றத்தில் உருட்டுகட்டையால்தான் எதிரி என்னை அடித்தார். உருட்டு கட்டை **ச.பொ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர். ஆஜர் எதிரி இன்று ஆஜரில் உள்ளார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**</u>

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 407/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 10.01.2025.**

| | |
|---|---|
| **Name : தேவகி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சென்னிமலையில் குடியிருந்து வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 எனது மாமியார் ஆவார். கடந்த 04.01.2024 ம் தேதி காலை 7.30 மணி அளவில் என்னுடைய அத்தை அ.சா.1 எனக்கு போன் செய்து ரஞ்சிதா, கௌஸ்யா இருவரும் அடித்துவிட்டதாக தகவல் சொன்னார். தகவல் தெரிந்து மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு வந்து எனது அத்தையை பார்த்தேன். அவருக்கு தலை, கால், நெஞ்சு ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை மேட்டூர் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் அ.சா.1 மருத்துவமனையில் சேர்ந்து 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். காலை 7.30 மணி சுமாருக்கு அ.சா.1 எனக்கு போன் மூலமாக தகவல் கொடுத்தார். என்ன தகவல் கொடுத்தார் என்றால் மருத்துவமனைக்கு வந்து கொண்டிருப்பதாக தகவல் கொடுத்தார். நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் காலை சுமார் 11 மணிக்கு வந்துவிட்டேன்.

3. நான் வரும்போது அ.சா.1 வலி தாங்க முடியாமல் மருத்துவமனைக்கு வெளியே அழுது கொண்டிருந்தார். என்ன காரணத்திற்காக அ.சா.1 நான் வரும் வரை மருத்துவமனையில் உள்நோயாளியாக சேரவில்லை என்றால் அவர் பயந்து இருந்த காரணத்தினால் மருத்துவமனையில் அவர் சேரவில்லை. மருத்துவமனையில் விசாரித்த பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

4. நான் கேள்விபட்டதுபோல் கேள்விபட்ட விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் அ.சா.1 தான் எதிரி தகாத வார்த்தையால் திட்டினார் என்றும், எதிரி அ.சா.1ன் மீது புகார் அளித்துவிடுவார் என்று பயந்து எதிரி மீது அ.சா.1 தவறுதலாக புகார் அளித்துள்ளார் என்றும் அவருக்கு ஆதரவாக நான் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. அ.சா.1 வீட்டில் நாய் வளர்த்து வருகிறார் என்றால் சரிதான். அந்த நாயை கட்டிபோட்டு வைத்திருப்பார்களா என்றால் கட்டிபோட்டுதான் வைத்திருப்பார்கள். அந்த நாயை அ.சா.1 காலையில் வெளியே அழைத்து செல்லும்போது அந்த நாய் வேகமாக இழுத்ததினால் அவர் நிலை தடுமாறி கீழே விழுந்ததால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.